# அழைப்புப் பணி

## (மனிதர்களை இறைவனின்பால் அழைத்தல்)



**மவ்லானா வஹீதுத்தீன் கான்**

# அழைப்புப் பணி

## (மனிதர்களை இறைவனின்பால் அழைத்தல்)

**மவ்லானா வஹீதுத்தீன் கான்**

தமிழில்
ஃபைஸ் காதிரி

Goodword

First Published Oct-2022

This book is a Tamil translation of
Dawat Ilallah by Maulana Wahiduddin Khan.

This book is copyright free.

CPS International
Centre for Peace and Spirituality International
1, Nizamuddin West Market, New Delhi – 110013, India.
e-mail: info@cpsglobal.org
www.cpsglobal.org

Goodword Books
A-21, Sector 4, Noida – 201301, Delhi NCR, India.
e-mail: info@goodwordbooks.com
www. Goodwordbooks.com

Center for Peace and Spirituality USA
2665, Byberry Road, Bensalem, PA 19020, USA.
e-mail: kkaleemuddin@gmail.com

Goodword Books – Chennai
324, Triplicane High Road, Chennai-600005, India.
e-mail: chennaigoodword@gmail.com
Mob: +91 97908 53944 / +91 96001 05558

# அழைப்புப் பணி

## முஸ்லிம் சமூகத்தின் பொறுப்பு

*திருக்குர்ஆன் அத்தியாயம் 'அல்பகரா'வில் இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் சமூகம் 'உம்ம(த்)தன் வச(த்)தன்' (2:143) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது 'நடுநிலைச் சமூகம்'* (Middle Community). *இறைத்தூதர் முஹம்மது அவர்களின் சமூகம் தூதருக்கும் பொது மனிதர்களுக்கும் இடையில் இருக்கிறது என்பதே இதன் பொருள். இறைத்தூதரின் மூலமாகக் கிடைத்திருக்கும் இறை வழிகாட்டுதலை வரவிருக்கும் மனிதத் தலைமுறையினர் அனைவருக்கும் இந்தச் சமூகம் கொண்டுசேர்க்க வேண்டும். திருக்குர்ஆனின் இந்த வசனத்தில் 'வசத்' என்னும் சொல் பயன்பாட்டுப் பொருளில் வரவில்லை. மாறாக அது தன்னுடைய அசலான பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது 'நடுநிலைச் சமூகம்' என்னும் பொருளில். இந்த வசனத்தில் 'உம்ம(த்)தன் வச(த்)தன்' என்னும் சொல், இந்தச் சமூகத்தின் பணித்திட்டத்தையோ அழைப்பியல் பொறுப்பையோ காட்டுகிறதேயன்றி அது ஒருபோதும் ரகசியமான சிறப்பைப் பற்றிப் பேசவில்லை.*

திருக்குர்ஆனின் இந்த வசனத்தில் இறைத்தூதர் முஹம்மது அவர்களது சமூகத்தின் உள்ளீடான பண்புகள் குறித்துப் பேசப்படவில்லை. மாறாக இதில் இந்தச் சமூகத்தின் புறவயமான பொறுப்பு எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. புறவயமான அந்தப் பொறுப்பானது 'இறைவனின் படைப்புத் திட்டம்' (Creation Plan of God) குறித்து மனிதர்களை அறியச் செய்வது; ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஒவ்வொரு தலைமுறையினர்க்குள்ளும் இறை அழைப்புப் பணியைத் தொடர்ந்து செய்வது. இந்த இறை அழைப்புப் பணித்திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக மட்டும்தான் இந்தச் சமூகம் 'இறைத்தூதர் முஹம்மது அவர்களின் சமூக'மாக இருப்பது நிரூபிக்கப்பட்டதாகிறது.

இந்தச் சமூகத்திற்கு அழைப்பியல் செயல்பாட்டிற்குரிய மூன்று படிநிலைகள் உள்ளன. இந்தச் சமூகத்தின் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தகுதிக்கு ஏற்றவாறு ஏதேனுமொரு படிநிலையின் வாயிலாகத் தான் 'இறை அழைப்பாளராக' இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தச் செயல்பாட்டில் பங்கு பெறாதவர்களுடைய பிற நன்மைகள் யாவும் இறைவனின் பார்வையில் மதிப்பற்றவையாகிவிடும். இந்த

விஷயத்தில் இறைவனின் அளவுகோல் என்பது, இறைத்தூதருக்கும் அவருடைய சமூகத்தினருக்கும் சமமானதுதான்.

'ஷரீஆ'வில் 'நிய்யத்' (எண்ணம்) எனப்படுவதே இந்தப்பணியின் முதல் படிநிலையாக இருக்கிறது. அதாவது எண்ணத்தின் அடிப்படையில் அழைப்பியல் செயல்பாட்டில் பங்கு பெறுவது. என்றாலும் இந்த 'நிய்யத்' என்பது வெறும் சொற்களின் மோதல் அல்ல. உண்மையான உள்ளத்தோடு துடிப்பதற்குப் பெயர்தான் 'நிய்யத்' என்பது. ஒவ்வோர் இறை நம்பிக்கையாளனும் பிற சமூகத்தினர் நேர்வழி பெறவேண்டும் என்பதில் பேராசை கொண்டவனாக இருக்க வேண்டியது அவசியமானது. அவன் அவர்களுடைய வழி தவறுதலைக் கண்டு நிம்மதி இழக்க வேண்டும்; அவன் தன்னுடைய தனிமைகளில் மனிதர்கள் நேர்வழி பெறவேண்டும் என்பதற்காக இறைவனிடம் இறைஞ்ச வேண்டும்; இது குறித்து நினைத்துப்பார்த்தாலே கண்ணீர் பொங்கி வரும் அளவுக்குத் தீவிரமான மன எழுச்சியை அவன் கொண்டிருக்க வேண்டும்.

'அழைப்புப் பணியின் பாதையில் எந்த வகையிலும் அவர்களுடைய சொந்த ஆளுமையே தடையாகி விடாதபடி தம்மைக்

காத்துக்கொள்வதில் இறை நம்பிக்கையாளர்கள் தீவிரமாக இருக்க வேண்டும்' என்பது இரண்டாவது படிநிலை. மக்களின் உள்ளத்தில் இஸ்லாத்திற்கு எதிராக வெறுப்பையும் விருப்பமின்மையையும் ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு செயலையும் அவர்கள் செய்யக்கூடாது. 'தாயீ' (இறை அழைப்பாளர்) 'மத்ஊ' (இறைவனின்பால் அழைக்கப்படுபவர்) ஆகியோருக்கிடையில் இறுக்கத்தை ஏற்படுத்தும் ஒவ்வொரு செயலிலிருந்தும் அவர்கள் விலகி விட வேண்டும். இதற்காகச் சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமின்றி அரசியல் ரீதியிலான இழப்பையே எதிர்கொள்ள நேரிட்டாலும் சரியே! எந்த நிலையிலும் அவர்கள் இதற்காக முனைப்புடன் இருக்க வேண்டும்.

மூன்றாவது படிநிலை என்பது, நேரடியாக அழைப்புப் பணி ஆகும். அதாவது இறைவனின் அடியார்களை சத்திய மார்க்கத்தின்பால் அழைத்தல்.

இந்தப் பணி திருக்குர்ஆனில் 'தஃவத் இலல்லாஹ்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது இறைவனின்பால் அழைத்தல்; மனிதனை அவனுடைய படைப்பாளனோடும் அவனுடைய அதிபதியினோடும் இணைத்தல். 'இறைவனின்பால்

அழைத்தல்' என்பது, 'இறைவனுடைய பூமியில், இறைவனுடைய அடிமைகளாக வாழ்வதுதான் உங்களுக்கான சரியான வாழ்க்கை முறை' என்பதை மனிதர்களுக்கு உணர்த்துவது ஆகும்.

மனிதனுக்கு இந்த உலகில் இரண்டு வகையான நடத்தைகள் மட்டுமே சாத்தியமாக இருக்கின்றன. ஒன்று தன்னைச் சார்ந்திருத்தல். மற்றொன்று தன் இறைவனைச் சார்ந்திருத்தல். தன்னைச் சார்ந்த வாழ்க்கையில் (self-oriented life) கர்வம், பொறாமை, தன் முனைப்பு போன்ற உணர்வுகள் மேலோங்குகின்றன. சத்தியம் எனத் தான் நினைப்பதையே சத்தியம் எனவும், அசத்தியம் எனத் தான் நினைப்பதையே அசத்தியம் எனவும் மனிதன் கருதத் தொடங்கிவிடுகிறான்.

இறைவனைச் சார்ந்த வாழ்க்கையானது (God-oriented life) இதற்கு முற்றிலும் தலைகீழானது. அது மனிதனுக்குள் அடிமைப் பண்பு, பணிவு, ஏற்கும் பண்பு, சுய மதிப்பீடு போன்ற உணர்வுகளை மேலெழச் செய்யும். முதலாவது நிலையில், மனிதன் சுய வழிபாடு செய்பவனாக இருக்கிறான் என்றால் இரண்டாம் நிலையில் அவன் இறை வழிபாடு செய்பவனாக ஆகிவிடுகிறான்.

அழைப்புப் பணி என்பது, ‘தன்னைச் சார்ந்த வாழ்க்கை’யின் மோசமான விளைவுகள் குறித்து மனிதனை எச்சரிக்கை செய்வதும், அவனை ‘இறைவனைச் சார்ந்த வாழ்க்கை’யை மேற்கொள்ள அழைப்பதும் ஆகும். இந்த இருவகை வாழ்க்கையைக் குறித்து அறிந்துகொள்வதற்குரிய நம்பத்தகுந்த-அதிகாரப்பூர்வமான மூல ஆதாரம் என்பது இறைவனின் போதனைகள் ஆகும். அவை குர்ஆனாகவும் இறைத்தூதரின் (சுன்னா எனும்) வழிமுறைகளாகவும் பாதுகாக்கப்பட்ட நிலையில் நம்மிடம் உள்ளன.

அழைப்புப் பணி என்பது முற்றிலும் மறுமையை மட்டுமே சார்ந்த பணி. சமூக, பொருளாதார, அரசியல் விவகாரங்களோடு இதற்கு நேரடியாக எந்தத் தொடர்பும் இல்லை. இது மனிதனை, இறைவனை நோக்கியும் மறுமையை நோக்கியும் அழைக்கும் அருஞ்செயல். இந்தப் பணி தன்னுடைய உண்மையான இயல்பின்படி முழுக்க முழுக்க இறைப்பணியாக இருக்கிறது. இதை இந்த ஆன்ம உணர்வோடு மட்டுமே நிறைவேற்றுவது அவசியமானது. இந்த ஆன்ம உணர்வின்றிச் செய்யப்படும் எந்தப் பணியும் அழைப்புப் பணியாக இருக்க முடியாது. அந்தப் பணிகள் ‘அழைப்புப் பணி’

என்னும் பெயரால் தொடங்கப்பட்டிருந்தாலும் சரியே!

அழைப்புப் பணி எனப்படுவது மனிதர்களை அரசியலின்பால் அழைப்பது அல்ல; சமூகப் பிரச்சினைகளின்பால் அழைப்பதும் இதன் இலக்கு அல்ல. இது முழுக்க முழுக்க மனிதர்களை இறைவனின்பால் அழைக்கும் பணி. இதை இந்த வகையில்தான் நிறைவேற்ற வேண்டும்.

இறைவனின்பால் அழைப்பது என்பதற்குப் பொருள் என்ன? இதன் நோக்கம், இறைவனுடைய படைப்புத் திட்டம் குறித்து மனிதனுக்கு விழிப்பை ஏற்படுத்துவது; இறைவனோடு அவனுக்கு இருக்கும் தொடர்பு என்ன என்பதையும், மேற்கொண்டு இறைவன் அவனோடு என்ன செய்யப்போகிறான் என்பதைக் குறித்தும், அவனுக்கு எடுத்துரைப்பது. இது ஒரு வகையில் மனிதனுக்கு இறைவனை அறிமுகப்படுத்தும் பணி. இதன் இலக்கு என்பது இறைவன் தொடர்பான மனிதனின் அலட்சியத்தை முறியடிப்பதும் இறவைனின் உள்ளமையை அறியச் செய்வதுமாகும். மனிதன் இறைவனுடைய ஆற்றலுக்கு எதிராகத் தன்னுடைய இயலாமையைக் கண்டறிய வேண்டும்; மறைவானவற்றின் திரை கிழிக்கப்படுவதற்கு முன்பே அவன் இறைவனைக்

கண்டுணர வேண்டும்; இறைவனை நேரடியாக எதிர்கொள்வதற்கு முன்பாகவே மறைமுகமாகக் கண்டடைந்துகொள்ளுதல் ஆகியன அழைப்பியல் செயல்பாட்டின் இலக்காக இருக்கின்றன.

அழைப்புப் பணியின் நோக்கம், மனிதனுக்குள் உறங்கிக்கிடக்கும் ஆன்மாவை எழுப்புவதும் வழி தவறிய மனிதனை இறைவனை நோக்கிச் செல்லும் நேரான பாதையில் நிற்கச் செய்வதும் ஆகும். இந்தப் பிரபஞ்சத்தின் சான்றுகளில் இறைவனின் அழகொளியைக் காணுகின்ற அகப் பார்வையை மனிதனுக்குள் உருவாக்கி அந்தப் பார்வை, படைப்பினங்களின் கண்ணாடியில் படைப்பாளனைத் திரையின்றிக் கண்டடைய வேண்டும் என்பதே இந்தப் பணியின் நோக்கம். ஒரு மனிதனை, நேரடியாக இறைவனோடு பிணைப்பை ஏற்படுத்தி, ஆன்மாவின் மட்டத்தில் அவனுக்கு இறைவனின் அகத்தூண்டுதல் (Divine Inspiration) கிடைக்கத் தொடங்கி, இறைவனின் ஒளியால் அவனுடைய உள்ளம் ஒளிர்ந்து, அவனுடைய உடல் முழுவதும் இறைவனின் அருள் மழையில் நனையத் தகுதியுடையதாக ஆக்குவதுதற்குப் பெயர்தான் ‘அழைப்புப் பணி’ என்பது.

மனிதன் இந்த உலகில் இருந்துகொண்டே மறு உலகின் படைப்பாக ஆகிவிட வேண்டும்; அவன் உலகின் மகத்துவத்தில் இறைவனின் மகத்துவத்தைக் கண்டடைய வேண்டும்; அவன் உலகின் அருட்கொடைகளில் மறுமையின் அருட்கொடைகளை அனுபவித்துப் பார்க்க வேண்டும்; உலகத் துன்பங்கள் அவனுக்கு நரகத்தின் துன்பத்தை நினைவூட்ட வேண்டும்; உலகக் காட்சிகள் அவனுக்கு மறுமையைக் காட்சிப்படுத்திக் காட்டக்கூடியவையாக இருக்கவேண்டும்; அழைப்புப் பணியின் இலக்கு இதுதான். இப்படிப்பட்ட மனிதர்களை உருவாக்குவதே அழைப்புப் பணியின்-அழைப்பாளரின் வெற்றி ஆகும்.

இறைவன் மனிதனை 'அழகிய வடிவில்' படைத்துப் பிறகு 'தாழ்ந்தவர்களில் மிகவும் தாழ்ந்தவனாக' ஆக்கிவிட்டதாகத் திருக்குர்ஆனில் (95:45) சொல்லப்பட்டிருக்கிறது. அழைப்புப் பணியின் நோக்கம், மனிதனை மீண்டும் அவனது உண்மையான தொடக்க நிலையை நோக்கித் திருப்புவதாகும். சொர்க்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பிறகு மீண்டும் அவனைச் சொர்க்கத்தின் பாதையில் செலுத்துவதாகும். இறைவனின் அருளிலிருந்து விலகிச் செல்பவர்களை மீண்டும் இறை அருளின் நிழலிற்குக் கீழ் கொண்டு சேர்ப்பதாகும்.

மனிதனுக்கான உதாரணம் தண்ணீரிலிருந்து எடுத்துப் பாலைவனத்தில் விடப்பட்ட மீனைப்போன்றது. அது தொடர்ந்து துடித்துக்கொண்டிருக்கும். இந்நிலையில் அந்த மீனை மீண்டும் தண்ணீரில் விட்டு விடுவதுதான் அதற்குக் காட்டும் சிறந்த அனுதாபமாக இருக்கும். மனிதனும் இதைப்போலத்தான் சொர்க்கத்தின் ஒரு படைப்பாக இருக்கிறான். அவனுக்குள் அறியப்படாத ஒரு முழுமையை (Ideal) அடையும் வேட்கை அளவு கடந்த நிலையில் பெறப்படுகிறது. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய இந்த அறியப்படாத முழுமைக்காக ஓடிக்கொண்டிருக்கிறான். தான் தேடிக்கொண்டிருக்கும் அந்த ‘முழுமை’ இதுவாக இருக்கலாம் என்ற எண்ணத்தில் அவன் ஒவ்வொரு முறையும் உலகின் ஏதேனுமொரு அழகிய பொருளை நோக்கி விரைகிறான். ஆனால் ஒவ்வொரு முறையும் அவன் தோல்வியுறுகிறான். இறுதியில் தன்னுடைய அந்த ‘முழுமை’ (Ideal) யை அடையாத நிலையிலேயே அவன் இறந்து விடுகிறான்.

ஓர் இறை அழைப்பாளர் (தாயீ) தன் அழைப்பியல் செயல்பாட்டை நிறைவேற்ற வேண்டிய இடம் இதுதான். மனிதன் தேடிக்கொண்டிருக்கும் ‘முழுமை’ இறைவனும் அவனுடைய சொர்க்கமும்

மட்டும்தான் என்பதை அந்த அழைப்பாளர் மனிதர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். இறைவனை அடைவதனால் மட்டுமே மனிதனால் தன்னுடைய 'முழுமை'யை அடைய முடியும். தான் தேடிய உலகம் தனக்குக் கிடைத்துவிட்டது என்ற மன நிறைவு சொர்க்கத்தைச் சென்றடைந்த பிறகு மட்டுமே கிடைக்கும்.

இதன் அடிப்படையில் ஒவ்வொரு மனிதனும் அழைப்பாளனின் இலக்காக இருக்கிறான். அவன் ஒவ்வொரு மனிதனையும் சென்றடைய வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு பார்வையின் மீதிருக்கும் திரையையும் அவன் விலக்க வேண்டும். அதாவது இந்த உலகில் ஏழு பில்லியன் மனிதர்கள் இருக்கிறார்கள் என்றால் ஓர் அழைப்பாளனுக்கு ஏழு பில்லியன் வேலைகள் செய்யவேண்டியிருக்கிறது; ஏழு பில்லியன் ஆன்மாக்களை அவர்களின் இறைவனிடம் சேர்க்க வேண்டியிருக்கிறது; ஏழு பில்லியன் மனிதர்களை சொர்க்கத்திலிருக்கும் அவர்களின் இருப்பிடம் வரை அனுப்பி வைக்க முயல வேண்டியிருக்கிறது.

அழைப்பாளன் எனப்படுபவன்,வாழ்க்கையின் பாதைகளில் கலங்கரை விளக்கமாக நிற்பவன்; மனிதக் குலத்தின் பாதை தவறிய கூட்டங்களுக்கு

இறை வழிகாட்டியாக இருப்பவன். திருக்குர்ஆன் அத்தியாயம் 'அத்தாரியாத்'தில் "அல்லாஹ்விடம் விரையுங்கள் அவனிடமிருந்து நான் உங்களைத் தெளிவாக எச்சரிப்பவனாக வந்திருக்கிறேன்." (51:50) என்று தூதரின் மொழியில் கூறப்பட்டிருக்கிறது. இதே கருத்து வேறு இடத்தில் "அல்லாஹ்வையே வணங்குங்கள்; சாத்தான்களிடமிருந்து விலகியிருங்கள்" (16:36) என்ற சொற்களில் கூறப்பட்டிருக்கிறது.

இந்த உலகில் மனிதன் இருவேறு அழைப்புகளுக்கிடையில் இருக்கிறான். ஒன்று இறைவனின் அழைப்பு. மற்றொன்று சாத்தானின் அழைப்பு. இறைவன் நன்மைகளின் மூல ஊற்றாக இருப்பவன். அவன் மனிதர்களை நன்மையின்பால் அழைத்துக்கொண்டிருக்கிறான். மனிதர்களுக்கான சோதனை என்பது சாத்தானின் சூழ்ச்சியில் சிக்காமல் சாத்தானை விட்டு விலகி இறைவனை நோக்கி விரைவதுதான்.

இந்த உலகில் ஒவ்வொரு மனிதனும் இந்த இருவேறு கோரிக்கைகளுக்கு இடையில் இருக்கிறான். ஒவ்வொரு மனிதனும் அகவயமான ஒரு போர் முனையில் நின்றிருக்கிறான். ஒரு புறம் இறைவனின்பால் இழுக்கும் அவனது மனசாட்சி இருக்கிறது. மறுபுறம் அவனைத் தள்ளிவிட்டுச்

சாத்தானிடம் கொண்டுசெல்லத் துடிக்கும் அவனது அகங்காரம் (Ego) இருக்கிறது. மனசாட்சி இறைவனின் பிரதிநிதியாகவும் அகங்காரம் சாத்தானின் பிரதிநிதியாகவும் இருக்கிறது.

இந்த உண்மை நிலை குறித்து மனிதனை எச்சரிக்கை செய்து, மனிதனுக்குள் அறிவு விழிப்பை ஏற்படுத்தி இந்த இரு தரப்புக் கோரிக்கைகளைப் புரிந்துகொள்ளத் தகுந்தவனாக அவனை ஆக்குவதுதான் அழைப்பாளனின் பணி. மனிதன் தன் அகங்காரத்தைத் தடை செய்து மனசாட்சியின் குரலை வலுப்படுத்துபவனாக வேண்டும். சாத்தானின் தூண்டுதல்களிலிருந்து தப்பித்துச் சொர்க்கத்தின்பால் செலுத்தும் பாதையின் பயணியாக மாற வேண்டும். பூமியில் நடந்துகொண்டிருக்கும் மற்ற எல்லா பணிகளை விடவும் இந்த அழைப்புப் பணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இது இறைத் தூதர்களின் பணி. இந்தப் பணிக்காக எழுபவர்கள் தனித்தன்மை கொண்ட அருட்கொடைகளால் சிறப்பிக்கப்படுவர்.

திருக்குர்ஆனின் 7ஆவது அத்தியாயத்தில் ‘சிகரவாசிகளை’ப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது உயரத்தில் இருப்பவர்கள். இவர்கள் மறுமையில் உயர்ந்த மேடைகளின் மீது நிற்க வைக்கப்படுபவர். இவர்கள் சொர்க்க வாசிகள்,

நரகவாசிகள் ஆகிய இரு சாராரைக் குறித்த இறைவனின் தீர்ப்பைப் பிரகடனப்படுத்துவர். அந்த வசனங்களின் மொழிபெயர்ப்பு பின்வருமாறு: "(சொர்க்கவாசிகள் நரகவாசிகள் ஆகிய) அவ்விரு பிரிவினரிடையே ஒரு தடுப்பு இருக்கும். அதன் சிகரங்களின் மீது சில மனிதர்கள் இருப்பார்கள். அவர்கள் (சொர்க்க, நரகவாசிகளில்) ஒவ்வொருவரையும் அவரவர் அடையாளங்களைக் கொண்டு அறிந்து கொள்வார்கள். அவர்கள் சொர்க்கவாசிகளை அழைத்து "உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்" என்று கூறுவர். அவர்கள் இன்னும் சொர்க்கத்தில் நுழைந்திருக்க மாட்டார்கள். ஆயினும் (அதில் நுழைந்துவிடும்) ஆவலுடன் இருப்பர். அவர்களின் பார்வை (நரகவாசிகளின் பக்கம்) திருப்பப்படும்போது இறைவனிடம் "எங்கள் இறைவா! இந்தத் தீவினை புரிந்த மக்களுடன் எங்களைச் சேர்த்து விடாதே" என்று (இறைஞ்சிக்) கூறுவர். சிகரங்களில் இருப்பவர்கள் (நரகத்தில் இருக்கும்) சில மனிதர்களை அவர்களின் அடையாளங்களினால் அறிந்துகொண்டு "உங்கள் ஆள் பலமும் நீங்கள் கொண்டிருந்த செருக்கும் உங்களுக்குப் பயனளிக்கவில்லையே" என்று கூறுவர். மேலும் (சொர்க்கவாசிகளை அவர்களுக்குச் சுட்டிக்காட்டி) "இவர்களைப் பற்றித்தானே நீங்கள்

இவர்களுக்கு அல்லாஹ் அருள் புரியவேமாட்டான் என்று சத்தியம் செய்து கூறிக் கொண்டிருந்தீர்கள்?" என்று கேட்பர். (பிறகு அல்லாஹ் சிகரங்களில் இருப்போரை நோக்கி) "நீங்கள் சொர்க்கத்தில் நுழைந்து விடுங்கள்; இனி உங்களுக்கு எந்த அச்சமுமில்லை; நீங்கள் துயரப்படவும் மாட்டீர்கள்" என்றும் கூறுவான்." *(7:46-49)*

"இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'சிகரவாசிகள்' எனப்படுவோர் 'ஷுஹதா'க்கள்' ஆவர். அதாவது, உலகத்திலிருக்கும் சமூகத்தினரிடையே இறைவனின் மார்க்கத்திற்கு சாட்சி பகர்ந்தவர்கள். அதைச் சிலர் ஏற்றிருப்பர் சிலர் மறுத்திருப்பர்." *(தஃப்ஸீருல் குர்த்துபீ 7/211)*

இந்த 'ஷுஹதா'க்களுக்காகத் திருக்குர்ஆனில் 'முன்திர்', 'முபஷ்ஷிர்', 'தாயீ' போன்ற பல்வேறு சொற்கள் வந்துள்ளன. இந்தக் கூட்டத்தில் முதலில் இறைத்தூதர்களும், அவர்களைத் தொடர்ந்து இறைத்தூதர்களை மாதிரியாகக் கொண்டு தம்முடைய காலத்தைச் சேர்ந்த மக்களிடையே அழைப்புப் பணியையும் (ஷஹாதத் என்னும்) சாட்சி பகர்தலையும் நிறைவேற்றிய அல்லாஹ்வின் குறிப்பிடத்தகுந்த அடியார்களும் அடங்குவர்.

மறுமையில் வழங்கப்பட இருக்கின்ற மனிதர்களின் நிரந்தர முடிவுக்கான தீர்ப்பானது உலகில் அவர்களிடையே நிறைவேற்றப்பட்ட (ஷஹாதத் எனும்) இந்த அழைப்புப் பணியை அடிப்படையாகக் கொண்டே இருக்கிறது. இந்தப் பணி உலகிலேயே மனிதர்களை இரு குழுக்களாகப் பிரிக்கிறது. ஒன்று இந்த அழைப்பை ஏற்பவர்கள் மற்றொன்று இந்த அழைப்பை மறுப்பவர்கள். மறுமையில் இந்த இரு குழுவினரும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுவிடுவர். பிறகு இரு குழுவினருக்கும் அவர்களுடைய செயல்களுக்குத் தக்கவாறு இரு வேறு முடிவுகளுக்கான தீர்ப்பு வழங்கப்படும்.

இந்தத் தீர்ப்பு, முழுக்க முழுக்க இறைவனுடைய தீர்ப்பாக இருக்கும் என்றாலும், உலகில் 'ஷஹாதத்'தையும் அழைப்புப் பணியையும் நிறைவேற்றிய குறிப்பிடத்தக்கத் தன் அடியார்களின் மூலமாக இந்தத் தீர்ப்பு பிரகடனப்படுத்தப்படும். இது அவர்களுக்கான தனிச்சிறப்புமிக்க வெகுமதியாகும். இந்தப் பிரகடனத்திற்காக மறுமையின் மைதானத்தில் உயரமான மேடைகள் அமைக்கப்படும். அதன் மீது அந்தச் சிகரவாசிகள் நின்றிருப்பர். அங்கிருந்து அவர்கள் ஒவ்வொருவரையும் பார்த்து அவர்கள் குறித்த இறைவனுடைய தீர்ப்பை அறிவிப்பர்.

இந்த ஷுஹதாக்களும் இறை அழைப்பாளர்களும் இறைப் பணியைத் தமது பணியாகக் கருதி அதற்காக உழைத்தவர்கள். எனவே இந்தச் செயலின் பயனாக மறுமையில் உயரமான இடங்களின் மீது நின்று சத்திய அழைப்பின் இறுதி விளைவைக் குறித்து மக்களுக்கு அறிவிப்புச் செய்கின்ற இந்தத் தனிச்சிறப்புமிக்க வெகுமானம் அவர்களுக்கு வழங்கப்படும். உலகில் தங்களுடைய நோக்கத்தில் அவர்கள் உயர்ந்திருந்தனர். எனவே மறுமையில் அவர்கள் தங்களுடைய செயல்களின் விளைவாக உயர்ந்தவர்களாக அழைக்கப்படுவர்.

இறைவன் மீது நம்பிக்கைகொண்ட பிறகு ஓர் அடியானிடமிருந்து செயல் வடிவத்தில் எதிர்பார்க்கப்படும்விஷயம்குறித்துத்திருக்குர்ஆனில் இருவகையான சொற்களில் கூறப்பட்டுள்ளது. 'இறைவனைப் பின்பற்றுதல்' (இதாஅத்) 'இறைப்பணியில் உதவுதல்' (நுஸ்ரத்). 'இதாஅத்' என்பது ஓர் அடியான் இறைவனிடமிருந்து தூதர் மூலமாகச் சொல்லப்பட்டிருக்கும் ஏவல் விலக்கல்களை முழுமையாகப் பின்பற்ற வேண்டும்; இறைவனால் வலியுறுத்தப்பட்டிருக்கும் அனைத்து விதமான கட்டளைகளையும் அவன் தன் வாழ்க்கையில் ஏற்று நடக்க வேண்டும்; இறைவன்

*தன்னுடைய வேதத்தின் மூலமாகவோ தன்னுடைய தூதரின் மூலமாகவும் பிரகடனப்படுத்தியிருக்கும் தவிர்க்கத்தகுந்தவை குறித்தான கட்டளைகளை ஏற்று அவற்றிலிருந்து அவன் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும்; என்பனவாகும்.*

*'நுஸ்ரத்' என்பது இறைவனுக்குச் செய்யும் உதவியாகும். நம்பிக்கைகொண்ட ஒரு மனிதனுக்குக் கிடைக்கும் தனிச்சிறப்புமிக்க அந்தஸ்து இது. இதைத்தான் குர்ஆன் 'தஃவத் இலல்லாஹ்' என்கிறது. இது அடியார்களின் மூலமாகச் செயல்படுத்தப்படும் இறைவனின் எதிர்பார்ப்புக்குரிய பணி என்பதால் இது 'நுஸ்ரத்' (இறைவனுக்கு உதவுதல்) என்றழைக்கப்படுகிறது.*

*'இபாதத்' (வணக்க வழிபாடு) 'அஃலாக்' (நற்பண்புகள்) 'முஆமலாத்' (கொடுக்கல், வாங்கல்) ஆகியவற்றில் இறைக் கட்டளைகளைப் பின்பற்றுவதென்பது அடியானின் சொந்தத் தேவையாக இருக்கிறது. இதன் மூலமாக ஓர் அடியான் தன்னுடைய அடிமைப்பண்பை மெய்ப்பித்து இறைவனின் வெகுமானங்களுக்கு உரியவன் ஆகிறான். ஆனால் அழைப்புப் பணி இதிலிருந்து வேறுபட்டது. திருக்குர்ஆனின்படி இது இறைவனின் புறத்திலிருந்து 'மார்க்க*

ஆதாரத்தை நிறைவு செய்து விடுதல்' (4:165) ஆகும். ஆனால் சோதனைக்காக இந்தப் பணி மனிதர்கள் மூலமாக நிறைவேற்றப்படுகிறது. இறைவனின் சார்பாக சில மனிதர்கள் நிறைவேற்றும் ஓர் இறைச் செயல்பாடுதான் இந்தப் பணி. பிறகு இறைவனிடமிருந்து இதற்கான வெகுமானத்தை அவர்கள் பெறுகிறார்கள்.

இறைத்தூதர் முஹம்மது அவர்கள் ஐயமின்றி உலகமக்கள் அனைவருக்குமான தூதர்தாம். ஆனால் அவர் குறுகியகாலம் இந்த உலகில் இருந்து இறைவனிடம் மீண்டுவிட்டார். அவருடைய இறப்பிற்குப்பின் அவருடைய சமூகம் (உம்மத்) இந்தப் பணிக்கான பொறுப்பைக் கொண்டுள்ளது. தம்முடைய வாழ்க்கையில் இறைத்தூதர்கள் நேரடியாக இந்தப் பணியை நிறைவேற்றினர். அவர்களுக்குப்பின் இந்தப் பணி அவருடைய சமூகத்தினர் மூலமாக நிறைவேற்றப்படும். தலைமுறை தலைமுறையாக ஒவ்வொரு காலக்கட்டத்தைச் சேர்ந்த மனிதர்களுக்கு முன்பும் இறைவனிடமிருந்து கொண்டுவரப்பட்டு இறுதிநாள்வரை பாதுகாக்கப்பட்டதான இந்த மார்க்கச் செய்தியைத் தொடர்ந்து எடுத்துரைப்பது இறைத்தூதரின் இந்தச் சமூகத்தின் மீது கட்டாயமாக இருக்கிறது.

இது குறித்த கூடுதலான விளக்கம், புகழ்பெற்ற நபிகள் நாயக வரலாற்றாசிரியர் இப்னு இஸ்ஹாக் (இறப்பு கி.பி.768) அவர்கள் பதிவு செய்திருக்கும் ஒரு நபி மொழியின் மூலமாகக் கிடக்கிறது. இந்த நபிமொழியில் நபிகள் நாயகம் முஹம்மது அவர்கள் இறைத்தூதர் ஈஸா அவர்களுடைய அழைப்புப் பணி குறித்தும் தம்முடைய அழைப்புப் பணி குறித்தும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நபிமொழியின் மொழிபெயர்ப்பு பின் வருமாறு: "இறுதித் தூதர் முஹம்மது அவர்கள் ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பிறகு (கி.பி.623) ஒரு நாள் தம்முடைய தோழர்களுக்கு முன் வந்தார். பிறகு "மனிதர்களே! இறைவன் என்னை முழு உலகிற்கும் அருட்கொடையாக அனுப்பி இருக்கிறான். இந்த விஷயத்தில் நீங்கள் இறைத்தூதர் ஈஸா அவர்களிடம் 'ஹவாரி'கள் (உதவியாளர்கள்) கருத்து வேறுபாடு கொண்டதைப் போல ஒரு போதும் என்னிடம் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள்" என்று கூறினார். நபித் தோழர்கள் 'இறைத்தூதரே! "ஹவாரி'கள் எவ்வாறு கருத்து வேறுபாடுகொண்டனர்?" என்று கேட்டனர். அதற்கு இறைத்தூதர் "நான் உங்களை அழைத்திருக்கும் பணியின்பால் இறைத்தூதர் ஈஸா அவர்கள் ஹவாரிகளை (Apostle) அழைத்தார். இறைத்தூதர் ஈஸா அவர்கள் யாரை 'அருகில்

*இருக்கும் பகுதிக்குச் செல்லுங்கள்' என்று கூறினாரோ அவர்கள் தயாராகிவிட்டனர். அவர் யாரைத் 'தொலைவான பகுதிக்குச் செல்லுங்கள்' என்று கூறினாரோ அவர்கள் தங்கள் உடன்பாடின்மையை வெளிப்படுத்தினர். அவர்களுக்கு அது பெரும் பாரமாக இருந்தது." என்று கூறினார். இதன் பிறகு இறைத்தூதர் தம்முடைய தோழர்களைப் பல்வேறு குழுத்தலைவர்கள், ஆட்சியாளர்கள் ஆகியோரிடம் தம்முடைய அழைப்புச் செய்தியோடு அனுப்பி வைத்தார். இப்னு இஸ்ஹாக்கின் அறிவிப்புப்படி இறைத்தூதர் முஹம்மது அவர்கள் தம்முடைய தோழர்களுக்கு எதிரே வந்து இந்த அழைப்புப் பணி குறித்து அவர்களுடைய கவனத்தை ஈர்த்த போது அவர்களிடம், "அல்லாஹ் என்னை உலக மக்கள் அனைவருக்கும் அருளாக அனுப்பியிருக்கிறான். எனவே எனது சார்பாக இந்தப் பணியை நீங்கள் நிறைவேற்றுங்கள். அல்லாஹ் உங்களுக்கு அருள் புரியட்டும்!" என்று கூறினார். (ஸீரத் இப்னு ஹிஷாம் 4/278)*

*ஒரு மனிதனுக்கு இந்தப் பூமியின் மேல் வானத்திற்குக் கீழ் நேரடியாக இறைப் பணி செய்ய முனைப்பு காட்டுவதை விடப் பெரிய கண்ணியம் வேறென்ன இருக்க முடியும்? இது ஒரு வகையில் மாட்சிமைமிக்க இறைவனின் சார்பாக நிற்பதாகும்.*

சந்தேகமின்றி மனிதனுக்கு இதை விடப் பெரிய கண்ணியம் இருக்க முடியாது.

இறைவன் சர்வ வல்லமை படைத்தவன். அவன், நாம் அறிந்த, அறியாத ஒவ்வொரு பணியையும் நிறைவேற்ற முழுமையான ஆற்றல் படைத்தவன். அவன் விரும்பினால் தன்னுடைய செய்தியைச் சென்றடையச் செய்ய கற்களையும் பேசவைத்து விடுவான். அவன் விரும்பினால் தன்னுடைய வாக்கைப் பிரகடனப்படுத்துவதற்காக மரங்களின் இலைகளுக்கு நாவைத் தந்துவிடுவான். ஆனால் இது இறைவனின் வழிமுறை அல்ல. மனிதர்களிடம் தன்னுடைய வாக்கைக் கொண்டு சேர்க்கும் பணியை மனிதர்களே நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் இறைவிருப்பம். 'இல்திபாஸ்' (6:9) எனும் 'ஐயத்தின்' திரை விலகாதிருக்க வேண்டும் என்பதற்காக! சோதனைக்கான காரணம் சிதையாதிருக்க வேண்டும் என்பதற்காக!

இந்தச் சூழ்நிலை மனிதனுக்கு மிகப் பெரிய நற்செயலுக்கான கதவைத் திறந்து வைத்திருக்கிறது. அழைப்புப் பணி எனும் இந்த இறைச்செயலுக்காக எழுபவர்களுக்கு உலக வாழ்வில் தனிப்பட்ட உதவி கிடைக்கப் பெறுகிறது. மேலும் மறுமையில்

*அவர்கள் உயர்ந்த வெகுமானங்களால் கண்ணியப்படுத்தப்படுவர்.*

*ஒரு மனிதன் தொழுகை புரியும்போது இறைவனுக்கு முன் தன்னுடைய இயலாமையை உறுதிப்படுத்துவதாக எண்ணுகிறான். இதற்கு மாற்றாக அழைப்புப் பணியை நிறைவேற்றும்போது 'இறைவனுடைய ஒரு பணியை நிறைவேற்றுகிறோம்' என்ற எண்ணம் அவனுக்கு ஏற்படுகிறது. சந்தேகமின்றி ஒரு மனிதனுக்கு 'நான் என்னுடைய இறைவனின் பணியில் மூழ்கி இருக்கிறேன். நான் என்னுடைய இறைவனின் ஒரு திட்டத்தை முழுமைப்படுத்திக் கொண்டிருக்கிறேன்.' என்பதை எண்ணிப்பார்ப்பதை விட இன்பமான வேறொரு அனுபவம் இருக்க முடியாது.*

## சமூகப் பொறுப்பு

*திருக்குர்ஆனின் அத்தியாயம் 'அல்அன்ஆம்'இல் கூறப்பட்டிருப்பதாவது: "(நபியே! அவர்களிடம்) 'சாட்சியங்களில் மிக வலுவானது எது?' என்று நீர் கேட்பீராக! நீரே (அவர்களிடம்) 'அல்லாஹ்தான் எனக்கும் உங்களுக்கும் இடையே (வலுவான) சாட்சியாக இருக்கிறான்' என்று கூறுவீராக! உங்களுக்கும் இந்தக் குர்ஆனை யாரெல்லாம்*

அடையப்பெறுகிறார்களோ அவர்களுக்கும் எச்சரிக்கை செய்வதற்காகவே எனக்கு இது (வேத) அறிவிப்பாக அருளப்பெற்றுள்ளது." (6:19)

இந்த வசனத்தில் "உங்களுக்கும் இந்தக் குர்ஆனை யாரெல்லாம் அடையப் பெறுகிறார்களோ அவர்களுக்கும் எச்சரிக்கை செய்வதற்காகவே எனக்கு இது(வேத) அறிவிப்பாக அருளப்பெற்றுள்ளது" என்று தூதரின் மொழியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இறைத்தூதர் அவர்கள் தம்முடைய காலத்தைச் சேர்ந்த மக்கள் வரை நேரடியாகத் தம்முடைய முயற்சிகளால் இந்தக் குர்ஆனின் வாக்கைக் கொண்டு சேர்த்தார். இப்பொழுது அவருக்குப்பின் அவருடைய சமூகம் அவருடைய இடத்தில் நின்று இந்தப் பணியை நிறைவேற்றும். இறுதித் தீர்ப்புநாள் வரும் வரை மனிதர்களின் அனைத்துத் தலைமுறையினர்க்கும் திருக்குர்ஆனைக் கொண்டு சேர்க்கும் இந்தப் பணியை இந்தச் சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தொடர்ந்து செய்து கொண்டிருப்பர்.

இது தொடர்பாக இறைத்தூதர் மீதிருந்த அதே பொறுப்பு இப்பொழுது இந்தச் சமூகத்தின் மீது சுமத்தப்பட்டுவிட்டது. எந்த நிலையிலும் இந்தச் சமூகம் குர்ஆனின் வாக்கை மனிதர்கள்

அனைவரிடமும் கொண்டு சேர்க்கவேண்டும். ‘பொதுமனிதர்களின் நேர்வழிக்காகப் பேராசை கொண்டவர்களாக இருக்கிறோம்’ என்பதை இந்தச் சமூகம் குறிப்பாக இந்தச் சமூகத்தின் அறிஞர்கள் உச்சபட்சமாக நிரூபிக்க வேண்டும். ‘இந்த முயற்சியில் அவர்கள் தம்மையே அழித்துக் கொள்வார்களோ?’ என்று எண்ணத் தோன்றும் அளவிற்கு அவர்கள் தம்மை இந்தப் பணியில் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். (18:6)

பொதுமக்களிடையே பிரச்சாரத்திற்காகச் சுமத்தப்பட்டிருக்கும் இந்தப் பொறுப்பானது, விரும்பினால் செய்யலாம் அல்லது விட்டுவிடலாம் என்கிற சுயவிருப்பத்திற்கு உட்பட்டது அல்ல. இது எந்நிலையிலும் நிறைவேற்றியாக வேண்டிய பெரும் பொறுப்பாக இருக்கிறது. இந்த விஷயத்தில் இறைத்தூதர் சாக்குப்போக்கு சொல்வது ஏற்புடையதாக இல்லாமல் இருந்ததைப் போலவே அவருடைய சமூகத்திற்கும் சாக்குப்போக்கு சொல்வது ஏற்புடையதாக இல்லை. அவர்கள் பொது மக்களை சத்தியத்தின்பால் அழைக்கும் இந்தக் கடமையைப் புறக்கணித்து விட்டவர்களாக இருந்தால் அவர்களுடைய வெளிப்படையான

*பிற மார்க்கச் செயல்பாடுகள் கூட அவர்களின் விடுதலைக்குப் போதுமானதாக இருக்க முடியாது.*

*ஆயிரக்கணக்கான மனிதர்கள் ஒவ்வொரு நாளும் இறந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறு அவர்கள் இறைவாக்கைச் செவியுற்று, அதை ஏற்று, இறைவனின் பிடியிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ளும் வாய்ப்பை இழந்து கொண்டிருக்கின்றனர்.*

## கட்டாயப் பணி

*திருக்குர்ஆனின் அத்தியாயம் 'அல்மாயிதா'வில் கூறப்பட்டிருப்பதாவது: "(எமது) தூதரே! உம் இறைவனிடமிருந்து உமக்கு அருளப்பட்டதை (மக்களுக்கு) எடுத்துரைத்து விடுவீராக! அவ்வாறு நீர் செய்யாவிடில் அவனது தூதை நிறைவேற்றியவர் ஆகமாட்டீர். அல்லாஹ் (தீங்கிழைக்கும்) மக்களிடமிருந்து உம்மைக் காப்பாற்றுவான். உறுதியாக அல்லாஹ் (தன்னை) மறுக்கும் மக்களுக்கு நேர் வழிகாட்ட மாட்டான்." (5:67)*

*இறைவன் தூதர்களை அனுப்பியதன் சிறப்பு நோக்கம் என்பது இறைவனிடமிருந்து அவர்கள் பெற்ற நேர்வழியை மனிதர்களிடம் கொண்டுசேர்த்து விடுவது ஆகும். இதுவே இறைத்தூதர்களின் அசலான*

பணி. இந்தப் பணியைச் செய்யவில்லையெனில் அவர்கள் தங்களுடைய பணித்திட்டத்தை நிறைவு செய்யவில்லை என்று பொருள்.

தூதுத்துவ முடிவுக்குப் பிறகு அந்த இடத்தில் அவரது சமூகம் இருக்கிறது. இறைத்தூதர் தம் காலத்தில் செய்த அதே பணியை அவர்கள் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. இறைத்தூதரைப் போலவே இறைத்தூதரின் சார்பாக அவர்கள் இந்தப் பணியைச் செய்ய வேண்டும். இறைவனுடைய மார்க்கத்தை அதன் தூய வடிவில் எல்லாக்காலத்து மக்களிடமும் அவர்கள் சென்றடையச் செய்து கொண்டே இருக்கவேண்டும். இந்தச் சமூகம் 'இறைத்தூதர் முஹம்மது அவர்களின்சமூகம்' என அழைக்கப்படுவதெல்லாம் இந்தப் பணியை அவர்கள் மேற்கொள்வதின் அடிப்படையில்தான் என்பது இதன் மூலமாகத் தெரிகிறது. இவ்வாறு அவர்கள் செய்யவில்லை எனில் மேற்கண்ட குர்ஆனின் வாக்கு அவர்கள் மீதும் உண்மையாகிவிடும். அதாவது இறைவனுடைய பார்வையில் அவர்கள் 'முஹம்மது அவர்களின் சமூகம்' என்கின்ற தகுதியை இழந்து விடுவர்.

"அல்லாஹ் (தீங்கிழைக்கும்) மக்களிடமிருந்து உம்மைக் காப்பாற்றுவான்" வேறு சொற்களில்

இதைச் சொல்வதாக இருந்தால், இந்தப் பணி விஷயத்தில் நீங்கள் எதையும் சாக்குப்போக்காகச் சொல்லக்கூடாது; இந்த விஷயத்தில் உங்களுடைய சாக்குப்போக்கு இறைவனிடம் ஏற்கத்தகுந்தது அல்ல. சாத்தியமான-சாத்தியமற்ற ஒவ்வொரு சாக்குப்போக்கையும் நீங்கள் இறைவனின் பொறுப்பில் விட்டுவிட்டு அழைப்பியல் செயல்பாட்டில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ளுங்கள். இந்த விஷயத்தில் வேறு எந்தப் பாதையும் நம்பிக்கையாளர்களுக்கு ஏற்புடையது அல்ல.

## அழைப்புப் பணி

தற்போதைய காலம் அழைப்புப் பணிக்கு அதிகபட்ச சாத்தியங்கள் நிறைந்த காலமாக இருக்கிறது. இன்று உலகெங்கும் மதச் சுதந்திரத்திற்கான சூழல் நிலவுகிறது. உயர்ந்த ஊடக வசதிகள் கிடைத்திருக்கின்றன. ஆற்றல் மிக்க அழைப்பியல் இலக்கியங்கள் நம்மிடம் அச்சிடப்பட்ட நிலையில் உள்ளன. இந்நிலையில் யாரிடமும் சாக்குப்போக்கு சொல்ல எந்த வாய்ப்பும் இல்லாமல் போய்விட்டது. எந்த ஓர் ஆணும் பெண்ணும் “என்னிடம் அழைப்புப் பணி செய்யும் தகுதி இல்லை. எனவே நான் இந்தப் பணியைச்

செய்யவில்லை“ என்று சொல்லித் தப்பித்து விட முடியாது.

இன்று நீங்கள் உங்களுடைய பணிகளையெல்லாம் விட்டுவிட்டு அவசியமான கல்விகள் அனைத்தையும் கற்று உங்களுக்குள் உயர்ந்த தகுதிகளை உருவாக்கிய பின்புதான் அழைப்புப் பணியைச் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. இப்பொழுது உங்கள் சார்பாக இந்தப் பணி செய்து முடிக்கப்பட்டுவிட்டது. உங்களுடைய வாழ்க்கையின் வரைபடத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாமலேயே அழைப்புப் பணியை வாழ்க்கையின் ஓர் அங்கமாக உங்களால் ஆக்கிக்கொள்ள முடியும்; ‘அழைப்புப் பணி’ எனும் பொறுப்பை உங்களால் செவ்வனே நிறைவேற்ற முடியும்.

CPSஇன் சார்பாகப் பல்வேறு மொழிகளில் ஆற்றல் மிக்க அழைப்பியல் இலக்கியங்கள் அச்சிடப்பட்டுவிட்டன. நீங்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளுங்கள். எங்குச் சென்றாலும் அவற்றை உங்களோடு வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் யாரேனும் ஒருவரைச் சந்திக்கும்போது ‘இது உங்களுக்கான ஆன்மிக அன்பளிப்பு’

(Sir, this is a spiritual gift for you!) என்று கூறி அவற்றைக் கொடுத்துவிடுங்கள்.

நீங்கள் இந்த இலக்கியங்களை உங்களுடைய அலுவலகங்களில், கடைகளில், உங்களுடைய நிறுவனங்களில் நன்றாகத் தெரியும் இடத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் தாமாகவே முன்வந்து அவற்றைப்பெற்று ஆர்வத்தோடு வாசிக்கத் தொடங்கிவிடுவர். இது இன்றைய உலகின் கோரிக்கையாக இருக்கிறது. இந்தக் கோரிக்கையை அழைப்புப் பணிக்காக முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வது அவசியமானது.

## அழைப்புப்பணியும் நற்செயல்களும்

“முதலில் முஸ்லிம்களில் சீர்திருத்தத்தை மேற்கொள்ளுங்கள். அவர்கள் சீரடைந்தால் மக்கள் அவர்களைப் பார்த்துத் தாமாகவே இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வர்.” என்று பொதுவாகக் கூறப்படுவதுண்டு. இந்தக் கருத்து அடிப்படையிலேயே தவறானது. அழைப்புப் பணி தன்னளவில் ஒரு பொறுப்பாக இருக்கிறது என்பதுதான் யதார்த்தம். எந்த நிலையிலும் தொழுதாக வேண்டும் என்பதைப்போல, எந்த நிலையிலும் இந்தப் பணியைச் செய்தாகவேண்டும்.

‘அழைப்புப் பணி’ எனும் இந்தக் கடமையை விட்டு விலகியிருப்பதற்கு எந்தக் காரணமும் ஏற்கத் தகுந்தது அல்ல. இப்படிப்பட்ட மனிதர்கள் தங்களுடைய கோட்பாட்டைச் சரி எனக் கருதினால், தொழுகையை மறந்து இருப்பவர்களைப்பார்த்து ‘தொழுங்கள்’ என்றும் சொல்லக்கூடாது. மாறாகத் தொழுதுவிட்டு ‘நம்மைப் பார்த்து மற்றவர்களும் தொழுகையைத் தொடங்கிவிடுவர்’ என்றுதான் நம்பவேண்டும்.

‘முஸ்லிம்கள் திருந்திவிட்டால் பிற மதத்தினர் அவர்களைப் பார்த்து இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வார்கள்.’ என்பது ஓர் அடிப்படையற்ற அனுமானம் மட்டுமே. இதற்கான சான்று, இந்த உலகில் ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்ட இறைத்தூதர்கள் வந்திருந்ததும், ஒருமித்தக் கருத்துப்படி அவர்கள் நற்பண்புகளின் உயர்ந்த இடத்தில் இருந்ததும் ஆகும். ஆனால் அந்தத் தூதர்களைப் பார்த்து மனிதர்கள் இறை மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இப்ராஹீம், மூஸா மற்றும் பிற தூதர்களின் நிலை என்ன ஆயிற்று என்பதைத் திருக்குர்ஆன் இப்படிச் சொல்லிக் காட்டுகிறது. “அந்தோ அடியார்களுக்கு ஏற்பட்ட கேடே! அவர்களிடம் எந்தத் தூதர் வந்தாலும் அவரை

*அவர்கள் ஏளனம் செய்யாமல் இருந்ததில்லை.” (36:30)*

*உண்மையில் ஒரு மனிதன், நன்மை புரியுமாறு யாராவது ஒருவருக்கு உபதேசம் செய்தால், அவனும் அதைப் பொறுப்புணர்வோடு செயல்படுத்த வேண்டும். ஆனால், ‘நற்செயல்புரிவது அழைப்புப் பணியில் நிபந்தனைக்குரியது’ என்பது இதன் பொருளல்ல. அழைப்பாளன் நற்செயல் புரிந்தாலும் சரி, புரியாவிட்டாலும் சரி. எந்நிலையிலும் அழைப்புப் பணி தொடர்ந்து செய்யப்படும்.*

*திருக்குர்ஆன் விரிவுரையாளர் இப்னு கஸீர் அவர்கள் அத்தியாயம் ‘அல்பகரா’ வின் வசன எண் 44-இன் கீழ் இவ்வாறு எழுதுகிறார்: “நன்மைகள் புரியத்தூண்டுவதும் அதைப் பின்பற்றுவதுமாகிய இரண்டும் கட்டாயமானதே. இதில் ஒன்று விடுபட்டுவிடுவதால் மற்றொன்று ரத்து செய்யப்படமாட்டாது. முற்கால அறிஞர்கள், பிற்கால அறிஞர்கள் ஆகிய அனைவரின் சரியான கூற்றும் இதுதான்.*

*உண்மையில் ஒரு மார்க்க அறிஞர், நன்மைகளை ஏவிக்கொண்டே இருப்பார்: தீமையைத் தடுப்பார். அந்தத் தீமையை அவர்*

*செய்து கொண்டிருந்தாலும் சரியே! சயீத் இப்னு ஜுபைர் தாபியீ அவர்கள், 'ஒருவன் தனக்குள் எந்தத் தீமையும் காணப்பெறாத நிலையில்தான் நன்மையை ஏவி தீமையைத் தடுக்கவேண்டும் என்றிருந்திருந்தால், யாருமே நன்மையை ஏவி தீமையைத் தடுத்திருக்க முடியாது.' என்று கூறுகிறார். (தஃப்ஸீர் இப்னு கஸீர் 85/1)*

*உண்மையில் 'அழைப்புப் பணி' என்பது பொறுப்புணர்வின் கீழ் வெளிப்படும் ஒரு செயலே அன்றி நற்குண உணர்வின் கீழ் வெளிப்படும் செயல் அல்ல. சத்தியத்தின்பால் அழைக்கப்படுபவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்கிறார் எனில் அது இஸ்லாத்தின் உண்மைத் தன்மையின் காரணத்தினால்தானே அன்றி முஸ்லிம்களின் செயல்பாடுகளைப் பார்த்து அல்ல. அழைப்பாளரை நற்செயல்களின் வடிவமாகக் கண்டு சத்தியத்தை ஏற்பதாக இருந்திருந்தால் இறைத்தூதர்கள் அனைவரையும் சுற்றிப் பெருங்கூட்டம் காணப்பட்டிருக்கும். ஆனால் இறைத்தூதர் முஹம்மது அவர்களைத்தவிர வேறு எந்தத் தூதரைச் சுற்றியும் ஒரு பெரிய கூட்டம் இருக்கவில்லை என்பதை நாம் அறிவோம். ஒரு கணக்கெடுப்பின்படி ஒவ்வோர் ஆண்டும் அமெரிக்காவில்*

*மட்டும் ஓர் இலட்சம் பேர் இஸ்லாமிய மார்க்கத்தில் நுழைகின்றனர். 'முஸ்லிம்களை நற்பண்பாளர்களாகப் பார்த்துத்தான் மனிதர்கள் இஸ்லாத்திற்கு வருகின்றனர்' என்ற கருத்து சரியாக இருந்தால், தற்காலத்தில் அமெரிக்கா மட்டுமின்றி பிறநாடுகளில் மாற்று மதத்தினர் முஸ்லிம்களைப் பார்த்தே இஸ்லாத்திற்கு வரும் அளவிற்கு அவ்வளவு நற்செயல்கள் புரிகின்றவர்களாக முஸ்லிம்கள் இருக்கின்றனரா?*

*உண்மையில் ஒவ்வொரு மனிதனுக்கும் சத்திய அழைப்பு கொடுத்தாக வேண்டியிருக்கிறது. அழைப்புப் பணிக்காக நற்செயல்கள் புரிவதை நிபந்தனையாகக்கொள்ள முடியாது. 'அல் பைஹகீ' மற்றும் 'இப்னு அஸாகர்' ஆகியோர் ஜாபிர் பின் அப்துல்லாஹ் மூலமாக ஹுதைஃபா (ரலி) அவர்கள் கூறியதாக அறிவிப்பதாவது, "நாம் இந்தக் கல்விக்கு (சத்திய மார்க்கம்) உரியவர்களாக ஆக்கப்பட்டு இருந்தோம். ஆதலால் இதனை நாம் உங்களுக்குக் கொடுக்கிறோம். எனினும் நாங்களே இதனை இன்னும் முழுமையாகப் பின்பற்றவில்லை." (ஹயாத்துஸ் ஸஹாபா 3/68)*

## ஒவ்வொரு வீடும் அழைப்புப் பணியின் மையம்

*இறைத்தூதர் மூஸா அவர்களின் காலக்கட்டம், இறைத்தூதர் ஈஸா அவர்கள் பிறப்பதற்கு முந்தைய (கி.மு.) காலக்கட்டமாகும். அதாவது கிட்டத்தட்ட 3500 ஆண்டுகளுக்கு முந்தைய காலம். அவர் பழங்கால எகிப்திற்கு இறைத்தூதராக அனுப்பப்பட்டார். அன்றைய எகிப்தில் இஸ்ராயீலின் சந்ததியினர் சில இலட்ச எண்ணிக்கையில் வசித்து வந்தனர். அவர்கள் அக்கால இறை நம்பிக்கையாளர்களாக இருந்தனர். அக்காலத்தில் இஸ்ராயீலின் சந்ததியினர்களுக்கு ஒரு கட்டளை கொடுக்கப்பட்டது. திருக்குர்ஆன் அதனைப் பின்வரும் சொற்களில் கூறுகிறது: "உங்களுடைய வீடுகளையே தொழும் இடங்களாக (கிப்லாவாக) ஆக்கிக்கொள்ளுங்கள்"(10:87)*

*நாம் கவனம் செலுத்துகின்ற மையப்பகுதிக்கே 'கிப்லா' என்று பெயர். இது மனிதர்களுக்கு 'கவனக் குவிமையமாக'* (Focus of attention) *அல்லது 'கவனத்திற்குரிய மையமாக'* (Centre of Attention) *இருக்கிறது. அக்காலச் சூழ்நிலையில் இதன் பொருள் 'உங்களுடைய வீடுகளை உங்களுக்கான இறை அழைப்பு, நற்பண்புப் பயிற்சி ஆகியவற்றின் மையமாக ஆக்கிக்கொள்ளுங்கள்' என்பது ஆகும்.*

இது ஒரு திட்டமாக இருந்தது. இந்தத் திட்டம் ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு இடத்திற்குமான தேவைக்குரியது. தற்காலத்திலும் அழைப்புப் பணியை நிலை பெறச்செய்ய இதைத்தான் செய்யவேண்டும்.

தற்காலத்தில் இதற்கான மிகச்சிறந்த முறை என்பது, ஒவ்வொருவரும் தத்தமது இடங்களில் நூலகம் எனும் பெயரில் ஓர் இடத்தை ஒதுக்கவேண்டும். இது வீட்டிற்குள் இருந்தாலும் சரி வீட்டிற்கு வெளியில் இருந்தாலும் சரி. ஒருவரிடம் ஒற்றை அறை கொண்ட வீடு இருந்தாலும் அதன் ஒரு பகுதியில் அலமாரியை நிறுத்தி அதற்கு நூலக வடிவத்தைக் கொடுக்க முடியும். இந்த நூலகம் செயல் வடிவத்தில் அழைப்புப் பணி-பண்படுத்துதல் ஆகியவற்றின் மையமாக இருக்கும். இது போன்ற அழைப்பியல் மையங்கள் ஒவ்வோர் இடத்திலும் நிறுவப்படவேண்டியது அவசியமானது.

## அழைப்புப்பணிக்காகப் புலம்பெயர்தல்

தற்காலத்தில் தொழில் துறை முன்னேற்றம் அடைந்ததன் காரணமாக இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த பெரும்பாலானோர் தங்களுடைய நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து முன்னேறிய நாடுகளுக்குச் சென்றனர். இவ்வாறு புலம் பெயர்ந்த

இஸ்லாமியர்களின் ஒட்டு மொத்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 15 மில்லியன் ஆகும். இறுதித் தூதர் முஹம்மது அவர்கள் தம்முடைய ஹஜ்ஜுக்குப் பிறகு விடை பெறும் போது தம்முடைய தோழர்களிடம், “அல்லாஹ் என்னை மனிதர்கள் அனைவருக்குமாக அனுப்பி இருக்கிறான். ஆகவே என்னுடைய வாக்குகளை நீங்கள் மனிதர்கள் அனைவரிடமும் கொண்டு சேர்த்துவிடுங்கள்” என்று கூறினார். அதன் பிறகு நபித் தோழர்களின் ஒரு பெரிய எண்ணிக்கை அரபு நாட்டிலிருந்து கிளம்பி பல்வேறு நாடுகளில் பரவி விட்டது.

நபிமொழியில் “யாருடைய ‘ஹிஜ்ரத்’ (புலம்பெயர்தல்) அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நோக்கியதாக இருக்கிறதோ அது அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நோக்கியதாகவே கருதப்படும். யாருடைய ‘ஹிஜ்ரத்’ உலகத்தை அடைவதற்காக இருக்கிறதோ அவனுடைய ஹிஜ்ரத் உலகத்தை நோக்கியதாகவே கருதப்படும்” என்று வந்திருக்கிறது. (முஸ்லிம்:1907)

இந்த நபி மொழியின் ஒளியில் பார்த்தால் நபித் தோழர்களின் ‘ஹிஜ்ரத்’தானது ‘தஃவத் இலல்லாஹ்’வுக்கான ‘ஹிஜ்ரத்’தாகவே இருந்தது. ஆதலால் அவர்களுக்கு அதற்கான நன்மை

கிடைக்கும். இதை வேறுசொற்களில் கூறுவதானால் 'நபித் தோழர்கள் கொடுப்பவர்களாக (Giver) வெளியே சென்றனர். தற்கால முஸ்லிம்கள் பெறுபவர்களாக (Taker) வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர். புலம்பெயர்ந்த முஸ்லிம்கள் நபித் தோழர்கள் பெற்ற வெகுமதிகளைப் பெற விரும்புவார்களானால், அவர்கள் தங்களுடைய புலம்பெயர்தலை 'இஸ்லாமிய மயம்' ஆக்கவேண்டும். அதாவது அவர்கள் அங்கே 'தாயீகளாக' (சத்திய அழைப்பாளர்களாக) வாழ வேண்டும். அவர்கள் அங்கே அல்லாஹ்வின் வாக்கைக் கொண்டு சேர்க்க வேண்டும்.

## குர்ஆன் ஓர்அழைப்பியல் வேதம்

குர்ஆன் ஓர் அழைப்பியல் நூலாகும். ஏழாவது நூற்றாண்டின் முற்பகுதியில் குர்ஆன் அருளப்பட்டபோது அதுவே அழைப்புப் பணிக்கான மிகப் பெரிய வழியாக இருந்தது. இறைத்தூதர், இறைத்தூதரின் தோழர்கள் ஆகியோரின் பரப்புரை தொடர்பாக அறிவிப்புகளில் இவ்வாறு வந்துள்ளது. "அவர்கள் மனிதர்களிடம் முதலில் இஸ்லாத்தை எடுத்துரைத்தனர். பிறகு குர்ஆனுடைய சில பகுதிகளை வாசித்துக்காட்டினர்."

ஆங்கில மொழி தற்காலத்தில் சர்வதேச மொழியாகக் கருதப்படுகிறது. ஆங்கில மொழியில் ஐம்பதுக்கும் மேற்பட்டத் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்புகள் கிடைக்கப்பெறுகின்றன. ஆனால் சொந்தச் சமூகம் சார்ந்த மனநிலையின் காரணமாக இந்த ஆங்கில மொழிபெயர்ப்புகள் நமது அழைப்பிற்குரியவர்களுக்கு நெருக்கமான மொழியில் (Mad'u-friendly language) தயாரிக்கப்படவில்லை. இந்தத் தேவையை நிறைவு செய்வதற்காகத்தான் நீண்ட நெடிய முயற்சிகளுக்குப்பிறகு CPS இன்டர்நேஷனல் (புதுதில்லி) 2008ஆம் ஆண்டில் திருக்குர்ஆனின் ஒரு புதிய ஆங்கில மொழிபெயர்ப்பை அச்சிட்டிருக்கிறது. இது நம்முடைய அழைப்பிற்குரிய மக்களுக்கு நெருக்கமான மொழியில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எனவே பிறமதச் சகோதரர்களிடம் இந்த மொழிபெயர்ப்பு அளிக்கப்பட்டால் அவர்கள் அதனை மனப்பூர்வமாகப் பெற்று ஆர்வத்தோடு படிக்கின்றனர். (தற்போது CPS-இன் சார்பாக நீண்டகால முயற்சிக்குப் பின் சமகாலத் தமிழில், சரளமான நடையில் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.)

வாஷிங்டன்னின் (அமெரிக்கா) ஒரு நிறுவனமான 'Pew Forum on Religion and Public life'

இன் சமீபத்திய ஆய்வில் சொல்லப்பட்டிருப்பதாவது: “தற்போது உலக மக்கள் தொகையில் முஸ்லிம்களின் எண்ணிக்கை ஒன்றரை பில்லியனைத் தாண்டியிருக்கிறது. இதன் பொருள் மக்கள் தொகையில் 4 மனிதர்களில் ஒருவர் முஸ்லிம் ஆவார்”

“World over 1 in 4 persons is a Muslim”

இதன் பொருள், ஒவ்வொரு முஸ்லிமும் குறைந்தபட்சம் நான்கு மாற்று மதச் சகோதரர்களுக்குத் திருக்குர்ஆன் அன்பளிப்பு செய்வதாக முடிவு செய்து கொண்டால், மிகவும் குறைந்த காலக்கட்டத்தில் உலகில் இருக்கும் ஆண்கள் பெண்கள் ஆகிய அனைவரிடமும் திருக்குர்ஆன் சென்றடைந்துவிடும்.

அழைப்புப் பணியின் நோக்கம் ‘மதமாற்றம்’ (Conversion) அல்ல என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். அழைப்புப் பணியின் நோக்கம் நற்செய்தி கூறுதலும், எச்சரிக்கை செய்தலும் (திருக்குர்ஆன் 19:97) ஆகும். திருக்குர்ஆனை மனிதர்களிடம் சென்றடையச் செய்ததும் கொள்கையின் அடிப்படையில் இந்தப் பணி நிறைவேறி விடுகிறது. அழைப்பாளனின் பணி என்பது

இறைவாக்கை அமைதியான முறையில் சத்திய அழைப்பிற்கு உரியவர்களிடம் கொண்டு சேர்த்து விடுவதாகும். அதன் பிறகு அழைக்கப்பட்டவர் அது குறித்து என்ன மறுமொழி கூறுகிறார் என்பது அவருடைய பொறுப்பு மட்டுமே!

"தீர்ப்புநாள் நெருங்கும் போது ஒவ்வொரு வீட்டிலும் இஸ்லாத்தின் வாக்கு (கலிமா) சென்று சேர்ந்துவிடும்" என்று நபிமொழியில் வந்திருக்கிறது. இந்த நபிமொழியில் 'இஸ்லாமிய வாக்கு' என்பது இறைவேதம் குர்ஆனைக் குறிக்கும். இறை வாக்கைக் கொண்டு சேர்க்கும் இந்தப் பணியில் தன்னுடைய பங்கை நிறைவேற்றுவது இப்பொழுது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் பொறுப்பாக உள்ளது. இஸ்லாமிய அழைப்புப் பணியின் இந்த வழிமுறை, படித்தவர்கள் படிக்காதவர்கள் ஆகிய அனைவருக்கும் சாத்தியமான ஒன்றாகவே இருக்கிறது.

## பள்ளிவாசலும் அழைப்புப் பணியும்

"நான் உலகின் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் செய்திருக்கிறேன். பிற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தாம் சென்ற இடங்களிலெல்லாம் பெரிய பெரிய கோட்டைகளைக் கட்டினர். ஆனால் இஸ்லாமியர்கள் அரபு நாட்டிலிருந்து வெளியேறி

உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சென்றபோது ஒவ்வோர் இடத்திலும் அவர்கள் பள்ளிவாசல்களைக் கட்டினர்." என்று சர்வதேச பயணி ஒருவர் எழுதி இருக்கிறார். இந்தப் பள்ளிவாசல்கள் ஒரு வகையில் இஸ்லாமிய மையங்களாக இருக்கின்றன. இஸ்லாத்தின் தகுதி நிலை என்பது அரசியல் சாராத ஒரு பேரரசுக்கு ஒப்பானது. இந்தப் பள்ளிவாசல்கள், உலக அளவில்- கிட்டத்தட்ட ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு ஊரிலும் நிறுவப்பட்டிருக்கும் அரசியல் சாராத சர்வதேசப் பேரரசின் கிளைகளைப் போன்றவை.

இந்தப் பள்ளிவாசல்கள் ஒரு வகையில் இஸ்லாத்தின் வணக்க வழிபாட்டிற்குரிய இடங்களாக இருக்கின்றன. மறுவகையில் இவை அழைப்புப் பணியின் மையங்களாக இருக்கின்றன .இந்த பள்ளிவாசல்களின் மூலமாக உலக அளவில் தொழுகை எனும் அமைப்பு நிலைநாட்டப்பட்டுள்ளது. இதைப் போலவே இந்தப் பள்ளிவாசல்களின் மூலமாக உலக அளவிலான அழைப்புப் பணியையும் முறைப்படுத்த முடியும். குறிப்பாக வெள்ளிக்கிழமையும் இரு பெருநாட்களும் இந்த நோக்கத்தை அடைவதற்கு மிகவும் தகுந்தவை. அந்நாட்களில் முஸ்லிம்கள் பெரிய எண்ணிக்கையில்

பள்ளிவாசல்களில் ஒன்று சேர்கின்றனர். இத்தோடு உலகச் சுற்றுப்பயணிகள் பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க பள்ளிவாசல்களுக்குத் தொடர்ந்து வருகை புரிந்த வண்ணம் இருக்கின்றனர். இவர்கள் மூலமாக இஸ்லாமிய அழைப்புப் பணி மிகுந்த வேகத்தோடு சர்வதேச அளவில் பரவலாம்.

நம்பிக்கையாளர்கள் மீது தொழுகை கட்டாயக் கடமையாக இருப்பதைப் போலவே அழைப்புப் பணியும் கட்டாயக் கடமையாக இருக்கிறது (2:143). பள்ளிவாசல்கள் அழைப்புப் பணி-வணக்க வழிபாடுகள் ஆகிய இரு கடமைகளையும் நிறைவேற்றுவதற்குரிய இயல்பான மையத்தின் தகுதிநிலையைப் பெற்றுள்ளன.

இந்த நோக்கத்திற்காக CPS இன்டர்நேஷனல் பெரிய எண்ணிக்கையில் துண்டு பிரசுரங்களையும் சிற்றேடுகளையும் அழகாக அச்சிட்டிருக்கிறது. அவற்றில் இஸ்லாமிய போதனைகள் எளிமையான முறையிலும் தற்கால நடையிலும் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் துண்டு பிரசுரங்களும் சிற்றேடுகளும் உருது, ஹிந்தி, ஆங்கிலம், (தமிழ்) ஆகிய மொழிகளில் பெரிய அளவில் கிடைக்கின்றன. பள்ளிவாசல்களின் இமாம்கள் இந்த அருஞ்செயலில் மிகவும்

*எளிதாகப் பங்குபெறலாம். அவர்கள் இந்த மார்க்க இலக்கியங்களைப் பெற்று தம்மிடம் வைத்து மக்களிடையே விநியோகிக்கலாம்.*

*இவ்வாறு பள்ளிவாசல்களின் இமாம்கள் ஒரே நேரத்தில் இரு வேலைகளைச் செய்யலாம். தொழுகைக்குத் தலைமை, இஸ்லாமிய அழைப்பைப் பரப்புதல்.*

## அழைப்புப் பணியும் பிரார்த்தனையும்

*"அழைப்புப் பணிக்கான வாய்ப்புகள் இருக்கும் இடத்தில் அழைப்புப் பணி செய்வது* (Dawah work)- *அதற்கான வாய்ப்புகள் இருப்பதாகத் தோன்றாத இடங்களில் பிரார்த்தனை செய்வது* Dua work)" *என்பது அழைப்புப் பணியின் மிக முக்கிய விதிமுறை ஆகும்.*

*பிற அனைத்து விஷயங்களோடும் பிரார்த்தனையின் (துஆ) தொடர்பு இருப்பதைப் போலவே அழைப்புப் பணியோடும் இருக்கிறது. உண்மையில் அழைப்புப் பணிக்குப் பிரார்த்தனை இன்றியமையாத ஓர் அம்சமாக இருக்கிறது. பிரார்த்தனையின்றி அழைப்புப் பணியை ஆற்றல் வாய்ந்ததாக நிறைவேற்ற இயலாது. பிரார்த்தனை*

*ஓர் அழைப்பாளனின் மிகப்பெரிய முதலீடாக இருக்கிறது.*

*ஒரு சத்திய அழைப்பாளன் (தாயீ) சத்தியத்தின்பால் அழைக்கப்படுவரின் (மத்ஊ) பெரிய நலம்விரும்பியாக இருக்கிறான். நலம் விரும்புதலின் இந்த உணர்வு, அவனை 'மத்ஊ'விற்காகத் தொடர்ந்து பிரார்த்தனை புரிய நிர்ப்பந்திக்கிறது. சத்திய அழைப்பை ஏற்பது என்பது எப்பொழுதுமே இறை வழிகாட்டலின் மூலமாக நடக்கக்கூடியது. இறை வழிகாட்டலால் மட்டுமே ஒரு மனிதனுடைய இதயம் சத்தியத்தை ஏற்பதற்காகத் திறக்கிறது. இறை வழிகாட்டலால் மட்டுமே ஒரு மனிதன் சத்திய அழைப்பைக் குறித்துப் பொறுப்புணர்வோடு சிந்திப்பது நிகழ்கிறது. இந்த அனைத்து விஷயங்களும் ஒரு 'தாயீ'யை 'மத்ஊ'விற்காகத் தொடர்ந்து பிரார்த்தனை புரிய கோரி நிற்கின்றன.*

## நல்விளைவுகளைக் கொண்டசெயல்பாடு

*என்னுடைய அனுபவத்தின்படி நல்விளைவை உண்டாக்கும் முயற்சிகளே சரியானவை. பைபிளில் சொல்லப்பட்டிருப்பதாவது: "நீங்கள் திரளாய் அதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக்கொண்டு வருகிறீர்கள்" (ஆகாய் 1:6)*

*பொதுவாக மனிதர்கள் அதிகமான பணிகளைச் செய்கின்றனர். ஆனால் அதற்கான சிறிதளவு பயனை மட்டுமே அவர்களால் பெற முடிகிறது என்ற உண்மை நிலை இதன் மூலமாகத் தெரிகிறது. இவ்வாறு நடப்பதெல்லாம் பொதுவாக மனிதர்கள் தங்களுடைய செயல்பாடுகளின் விளைவைத் தங்களுக்கு முன் வைக்காத காரணத்தால்தான். எப்பொழுதும் விளைவுகளை முன்வைத்துச் செயல்படுங்கள் என்றும், நல்விளைவுகளை ஏற்படுத்தும் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும் பணியை மட்டுமே செய்யுங்கள் என்றும் நான் உங்கள் அனைவருக்கும் சொல்வேன்.*

## ‘இக்வானுர் ரஸூல்’ எனும் பாத்திரம்

*இறைத்தூதர் அவர்களின் ஒரு நபி மொழியில் ‘இக்வான்’ களைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஹதீஸின் வாக்கியங்கள் பின்வருமாறு: “நமது ‘இக்வான்’களை (சகோதரர்களை) நாம் பார்க்க வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.” என்று இறைத்தூதர் கூறினார். அப்போது நபித்தோழர்கள் “நாங்கள் உங்களுடைய ‘இக்வான்’கள்(சகோதரர்கள்) இல்லையா இறைத்தூதரே!” என்று கேட்டனர்.*

“நீங்கள் என்னுடைய தோழர்கள். நம்முடைய ‘இக்வான்’கள் இன்னும் வராதவர்கள்” என்று இறைத்தூதர் கூறினார். (முஸ்லிம்: 367)

மேற்கண்ட நபிமொழியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ‘இக்வான்’கள் எனப்படுவோர் இறைத் தூதரைக் கண்டடைய வேண்டிய முறைப்படிக் கண்டறிந்து, மனிதர்கள் அனைவருக்கும் இறைவனின் நிரந்தர வாக்கைக் கொண்டு சேர்ப்பதற்காகப் பிற்காலத்தில் எழவிருக்கும் இறைநம்பிக்கையாளர்கள் ஆவர். ‘இக்வானுர் ரஸூல்’ என்பது வழக்கமான பொருளில் ‘பட்டம்’ அல்ல. மாறாக அது ஒரு பொறுப்பே ஆகும்.

‘இக்வானுர் ரஸூல்’ எனும் சொல் கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகளாக ரகசியங்கள் நிறைந்ததாக இருக்கிறது. வரலாற்றில் எந்த காலக்கட்டத்திலும் ‘இக்வான்’கள் யார்? எதிர்காலத்தில் அவர்களது பாத்திரம் என்னவாக இருக்கும்? என்பன வரையறுக்கப்பட்ட வகையில் சொல்லப்படவில்லை.

இந்த நபிமொழியின் மூலமாக அறிவியலுக்குப் பிந்தைய காலத்தில் (post scientific era) அழைப்புப் பணி தொடர்பான தூதுத்துவப் பாத்திரம் இன்னும் நிறைவேற்றப்பட வேண்டியிருக்கிறது

என்பது தெளிவாகத் தெரிகிறது. அதாவது சமகால மொழியில் இறைவனின் சத்திய வாக்கை அதன் தூய, கலப்படமற்ற வடிவத்தில் மனிதர்களிடம் எடுத்துரைப்பது. அறிவியலுக்குப் பிந்தைய காலக்கட்டத்தில் எழவிருக்கும் இந்த அழைப்புகுழு, உறுதியாக 'இக்வானுர் ரஸூல்' எனும் தலைப்பைப் பெற எதிர் நோக்கியிருக்கும் ஒரு குழுவாக இருக்கிறது எனக்கொள்ளலாம். உங்களிலுள்ள ஒவ்வோர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இந்தச் சாத்தியத்தை உண்மைப்படுத்துவது அவசியமானதாக இருக்கிறது.

இந்தச் சாத்தியத்தை உண்மைப்படுத்துவதென்பது முதலில் நீங்கள் இஸ்லாமிய மார்க்கம் குறித்த ஞானத்தைப் பெற்றுக்கொள்வதன் மூலமாக நிகழும். அதன் பிறகு நீங்கள் திருக்குர்ஆனின் மொழிபெயர்ப்புகளைப் பரப்பும் பணியையும் CPS இன்டர்நேஷனல் மூலமாக அச்சிடப்பட்டிருக்கும் நூல்களைப் பிறமனிதர்களிடம் கொண்டுசேர்க்கும் பணியையும் செய்யுங்கள்.

இதற்கு உங்களுக்குள் மனிதர்கள் அனைவருக்காகவும் நலம் விரும்பும் பேரார்வம் இருப்பது அவசியமானது. மனிதர்கள் அனைவருக்குமான - உண்மையான நலம்விரும்பியாக நீங்கள் எழவேண்டும். ஒவ்வொரு மனிதனுக்காகவும்

உங்களுடைய உள்ளத்தில் அன்பும் பரிவும் இருக்க வேண்டும். உங்களுடைய இலக்கு என்னவாக இருக்க வேண்டும் என்பது ஒரு நபி மொழியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: "இறைவன் இஸ்லாத்தின் வாக்கை நுழையச் செய்யாத எந்த ஒரு வீடும் எந்த ஒரு கூடாரமும் இந்த பூமிப் பரப்பில் எஞ்சியிருக்காது." (முஸ்னத் அஹ்மத் : 23183)

இது புதிரான விஷயம் ஒன்றும் கிடையாது. இது அழைப்புப் பணிக்கான சாத்தியக்கூறுகளின் வெளிப்பாடுதான். இது 'தொலைத் தொடர்பு சாதனங்களின் பெருநிகழ்வுக்குப்பின் அவற்றைப் பயன்படுத்துவதன் மூலமாக ஒவ்வொரு மனிதனிடமும் இஸ்லாமிய வாக்கு கொண்டு சேர்க்கப்படுவது சாத்தியமாகிவிடும்' என்பதன் முன்னறிவிப்பே! நாம் அழைப்புப் பணியை நமது முதல் அக்கறையாகக் கொண்டு (primary concern) எல்லா விஷயங்களுக்கும் இரண்டாம்பட்ச அந்தஸ்து (secondary) வழங்கும் போது மட்டும்தான் இது சாத்தியமாகக் கூடும்.

## 'கருத்துவேறுபாடு' எனும் சாக்கு

அழைப்பியல் பணிக்கு ஒற்றுமை மிகவும் அவசியமானது. ஒற்றுமை என்பதன் பொருள் 'கருத்து வேறுபாடு இருந்தும் ஒன்றுபட்டு இருத்தல்'

என்பதாகும். ஒற்றுமை நமது வலிமை; கருத்து வேறுபாடு நமது வலுவின்மை. என்பதை நீங்கள் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்.

United we stand, devided we fall

நீங்கள் இந்த நபிமொழியை உங்கள் மனதில் எப்பொழுதும் பசுமையாக வைத்துக்கொள்ளுங்கள். “கூட்டமைப்பிலிருந்து (ஜமாஅத்) விலகியவன் நரகத்திற்குச் செல்வான்.“ (திர்மிதி:2167)

இந்த நபிமொழி மிகவும் முக்கியமானது. இதில் சொல்லப்பட்டிருக்கும் கருத்து வேறுபாடு என்பது, ‘வேறுபாட்டு உளவியல்’ தொடர்பானதே அன்றி தனிக் குழுக்களுக்கு இடையேயான கருத்து வேறுபாடு அல்ல. அதாவது அடிப்படையில் தீமை என்பது ஏதேனுமொரு குழுவிலிருந்து விலகிக்கொள்வது அல்ல. மாறாக கருத்து வேறுபாட்டைத் தூக்கிப்பிடித்து ஒற்றுமையைச் சுக்குநூறாக்கி விடுவதே ஆகும். ஆதலால் நீங்கள் எப்பொழுதும் கருத்து வேறுபாட்டைக் காரணம் காட்டி அழைப்புப் பணியிலிருந்து விலகிவிட வேண்டாம். இறைவன் இது தொடர்பாக உங்களிடமிருந்து எந்தச் சாக்குப் போக்கையும் ஏற்றுக் கொள்ளமாட்டான்.

## தம் கருத்தை விட்டுக்கொடுத்தல்

ஒரு மனிதன் ஒரு கருத்தை ஏற்றுக் கொள்ளும்போது ‘அவன் ஏற்றுக்கொண்ட கருத்து மட்டும்தான் சரியானது என்று நினைத்துக் கொள்கிறான். இது அவனுடைய சிந்தனைப் பின்புலத்தின் காரணமாக நிகழ்கிறது.எனவேதான் ‘ஒரு மனிதனுக்கு மிகப்பெரிய தியாகம் என்பது தன்னுடைய கருத்தைத் தியாகம் செய்வதாக இருக்கிறது’ என்று சரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் நீங்கள் உங்கள் கருத்தைத் தியாகம் செய்ய வேண்டியிருக்கும். உறுதியாக இது மிகப்பெரிய தியாகம் ஆகும். இந்தத் தியாகத்தின் விலையைக் கொடுத்துதான் உங்களால் ஒன்றுபட்டு அழைப்பியல் கடமையை நிறைவேற்ற முடியும்.

இறைவனின் நிரந்தர வாக்கை மனிதர்கள் அனைவரிடமும் கொண்டு சேர்க்கக் கீழ்க்காணும் வலைத்தளங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன:

www.cpsglobal.org
www.alquranmission.org
www.goodwordbooks.com

நீங்கள் இந்த வலைத்தளங்கள் குறித்து மக்களிடம் அதிகமாகத் தெரியப்படுத்துங்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஊடகங்களைப் பயன்படுத்தி, ஒன்றுபட்டு இறைவனின் வாக்கை இந்தியாவிலும் உலகமக்கள் அனைவரிடமும் கொண்டு சேர்க்கவேண்டும்.

## இந்தியாவில் அழைப்புப்பணி

"பிற்காலத்தில் 'தஃவத் இலல்லாஹ்'வின் பணியைச் செய்ய இந்தியாவில் குறிப்பிட்ட ஒரு குழு (அஸாபா) எழும்" என்ற முன்னறிவிப்பு ஒரு நபி மொழியின் மூலமாகத் தெரிகிறது (நஸாயீ: 3175). குறிப்பிட்ட இந்தக் குழு சர்வதேச அளவில் அழைப்புப் பணியை மேற்கொள்வது போலவே இந்தியாவிலும் மேற்கொண்டு மக்களுக்குச் சொர்க்கத்தின் பாதையைக் காட்டும்.


வெளிப்புறமாகப் பார்த்தால், 'மனிதர்கள் அனைவரும் இறை அருளின் நிழலுக்குக் கீழ் வந்துவிடும் வண்ணமாக இந்தியாவில் அழைப்புப் பணி ஒருங்கிணைக்கப்பட வேண்டும்' என்பது இறைவனின் புறத்தில் முடிவு செய்யப்பட்டுவிட்டது என்றே தோன்றுகிறது. குறிப்பிட்ட இந்த நபிமொழியில் இந்தியாவில் எழக்கூடிய இந்த அழைப்புப் பணிக்குழு நரக வேதனையிலிருந்து பாதுகாக்கப்பட்டதாக இருக்கும் என்றும், சொர்க்கத்தின் வாயில்கள் இவர்களுக்காகத் திறக்கப்படும் என்றும், இவர்கள்

*இறைவனின் நிரந்தர சொர்க்கத்தில் இடம் பெறுவர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் இந்தப் பணியில் நீங்கள் முழு நம்பிக்கையோடு முழுமையாக இணைந்துவிட வேண்டும்.*

*ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவரும் தம்மை இந்தப் பணியின் பிரிக்க முடியாத அங்கமாக ஆக்கிக்கொள்ள வேண்டும். நீங்கள் அழைப்புப் பணிக்கான உங்களுடைய பொறுப்பை நிறைவேற்றினால், இறைத்தூதரால் முன்னறிவிப்பாக வழங்கப்பட்ட - நற்செய்தியாக அறிவிக்கப்பட்ட அந்தக் குழுவில் உறுதியாக இறைவன் உங்களையும் சேர்த்துவிடுவான்.*

*இறை அழைப்புப் பணியில் இணைந்து நமக்கு உதவிபுரிய விரும்புவோர் தங்களது முழுமையான முகவரியையும் அலைபேசி எண், மின்னஞ்சல் போன்றவற்றையும் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். அழைப்புப் பணியில் நீங்கள் எங்களுக்கு எந்த வகையில் உதவ முடியும் என்பதையும் தெரியப்படுத்த வேண்டுகிறோம்.*

Goodword Books
324, Triplicane High Road, Chennai- 600005.
Mobile: +91-9600105558 / +91 97908 53944
email: chennaigoodword@gmail.com



**மவ்லானா வஹீதுத்தீன் கான்** (1925-2021) ஓர் இஸ்லாமிய அறிஞரும் ஆன்மிகத் தலைவரும் அமைதிச் செயல்பாட்டாளரும் ஆவார். உலக அமைதிக்கான அவரது முக்கிய பங்களிப்பிற்காக அவரது பணி சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

மவ்லானா அவர்கள் 200 புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார்.

அவை இஸ்லாத்தின் ஆன்மிக ஞானம், இறைத்தூதரின் வன்முறையற்ற அணுகுமுறை, நவீனத்துவம் மற்றும் பிற சமகால பிரச்சினைகளுடன் இஸ்லாத்தின் உறவு ஆகியவற்றைக் குறித்துப் பேசுகின்றன.

அவரது ஆங்கில திருக்குர்ஆன் மொழியாக்கம் எளிமையானதாகவும் தெளிவானதாகவும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதாகவும் இருப்பதாகப் பரவலாகப் பாராட்டைப் பெற்றது. அவரது உருது, ஆங்கில மொழியாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சமகாலத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் திருக்குர்ஆனும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அமைதியின் கலாச்சாரத்தைப் பிரபலப்படுத்தவும் இஸ்லாத்தின் ஆன்மிகச் செய்தியை மக்களுடன் பகிர்ந்து கொள்ளவும் 2001 ஆம் ஆண்டு அவர் அமைதி மற்றும் ஆன்மிகத்திற்கான சர்வதேச மையத்தை (Cps International) தில்லியில் நிறுவினார்.

முஸ்லிம்கள் அனைவரின் மீதும் தொழுகை கடமையாக இருப்பதைப் போலவே அழைப்புப் பணியும் (தஃவத் இலல்லாஹ்) கடமையாக இருக்கிறது. தொழுகையை நிறைவேற்றாமல் ஒரு மனிதன் இறை நம்பிக்கையாளனாக இருக்க முடியாது. இதைப்போலவே 'அழைப்புப் பணி' எனும் கடமையை நிறைவேற்றாமல் ஒருவன் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தைச் சேர்ந்தவனாக இருப்பது உறுதிப்படுத்தப்பட மாட்டாது. முஸ்லிம்களாகிய ஒவ்வொருவரும் தொழுகையைத் தங்களுடைய வாழ்க்கையின் தவிர்க்க இயலாத ஓர் அங்கமாக ஆக்கிக்கொண்டதைப் போலவே அழைப்புப் பணியையும் தங்களுடைய வாழ்க்கையின் தவிர்க்க இயலாத ஓர் அங்கமாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

goodwordbooks.com cpsglobal.org

Goodword Books

CPS International
centre for peace & spirituality